# வில்லுப் பாட்டு

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

4576

சென்னை
அரசாங்க
செய்தித் துறை
வெளியீடு....

## வில்லுப் பாட்டு

# இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

ஆக்கியோன் :

திரு. தி. கா. தி. துரைராசன்

©

GOVERNMENT OF MADRAS
1958

சென்னை அரசாங்க செய்தித்துறை வெளியீடு.

# முன்னுரை

நாட்டின் நலிவு தீரவும் நன்மை வளரவும் வகுக்கப்பட்ட திட்டங்களே ஐந்தாண்டுத் திட்டங்களாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறேம்.

மகத்தான திட்டங்களாயினும், அவைகளை நிறைவேற்ற மலை மலையான செல்வமிருப்பினும் மக்களின் பூரணமான ஒத்துழைப்பு இல்லையென்றால் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. மக்களின் முழு ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டுமென்றால் அவர்கள் அந்தத் திட்டங்களைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். அறிந்துகொள்ளுமாறு திட்டத்தின் கொள்கைகள் மக்களிடம் பரவவேண்டும்.

இக் கருத்தினை அடிப்படையாகக்கொண்டு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி மக்களிடம் தெளிவாக எடுத்துச் சொல்வதற்காக இந்த வில்லுப் பாட்டு எழுதப் பட்டது. தமிழ்ப் பெரு மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் என்று நம்புகிறேம்.

நெறியாளர்,

**சென்னை அரசாங்க செய்தித்துறை.**

# இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

## வில்லுப் பாட்டு.

### தமிழ்த்தாய் வாழ்த்து.

(மகாகவி பாரதியின் எங்கள் தாய்—மெட்டு.)

வேங்கடமும் அலையோங்கிடும் தென்திசை
ஆழியதும் உடையாள்—குற்றம்
நீங்கிய தொல் புகழ் தாங்கியவள் வளம்
ஈந்திடுவாள்—எங்கள் தாய்
கன்னல் வயலுடன் செந்நெற் கழனிகள்
கொண்டவளாம் எங்கள் தாய்—இடை
மின்னல் நிகர் எழில் பொன்னை நிகர்—இந்த
மேதினியில் சிறந்ததாள்—எங்கள் தாய் (எங்)

முக்கோடி என்றிடும் மக்கட் தொகுதியைக்
கொண்டவளாம் எங்கள் தாய்—எட்டு
திக்கும்புகழ் மிகுதக்க குறள் சிலம்
பாட வளர்ந்தவளாம்—எங்கள் தாய் (எங்)

**அண்.**—அன்புள்ள தமிழ்ப் பெருமக்களே.

**தம்பி.**—என்ன ?

**அண்.**—டேய்....உன்னை யாருடா கூப்பிட்டது ? நான் இங்கே கூடியிருக்கும் பெரியோர்களை அல்லவா கூப்பிட்டேன்....

**தம்பி.**—சரி சரி....கூப்பிடு, கூப்பிடு....கூப்பாடு போடு.

**அண்.**—இன்றைக்கு நாங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி பாடப்போறோம்.

**தம்பி.**—என்னது பாடப்போறேமா ? பாடத்தானே வந்திருக்கோம்....

**அண்.**—ஆமா....பாட வந்திருக்கோம்....

**தம்பி.**—ஆமா ! இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தைப் பாடப் போறேம்ன்னு சொல்றியே—முதல் ஐந்தாண்டு திட்டம் என்ன ஆச்சு....அது பற்றி ஒரு இன்பர்மேஷன் கூட இல்லேயா ?

**அண்.**—எண்டா—இல்லே ? நிறைய இருக்கு....சொல்றேன் கேளு....

(பாட்டு)

(நாடோடிச் சிந்து—மெட்டு)

பார்புகழும் சாதனையைப் பாடிடப் போறேம்—நாங்க
பாடிடப் போறேம்—நம்ப
பாரதத்தின் சக்திதன்னைக் கூறிடப்போறேம்—நாங்க
கூறிடப்போறேம்—நாங்க [பார்]
ஊர்செழிக்க உதவும் திட்டம் ஐந்தாண்டு திட்டம்—இதன்
உயர்வு—சிறப்பு பெருமை எட்டு திசையிலும் எட்டும்
வறுமை நீங்கி வளமும் சுகமும் வாழ்வினில் கிட்டும்—
இதை வகுத்து நடத்தும் எங்கள் வாழ்வில் இன்பம்
மலரட்டும். (பாரதத்தின்)

**அண்.**—டேய் தம்பி....மணிமேகலேன்னு ஒரு தமிழ் இலக்கியம் கேள்விப்பட்டிருக்கியா ?

**தம்பி.**—கேள்விப்பட்டிருக்கியாவது ? சரிதான் போ....படிச்சிருக்கேன்....

**அண்.**—படிச்சிருக்கியா ? பரவாயில்லேயே !

**தம்பி.**—ஆனு மறந்துவிட்டேன் !...

அண்.—பூ ! இவ்வளவுதானு ? அதிலே "பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்க" அப்படின்னு ஒரு வாக்கியம் வருது....அதாவது பசியும், பிணியும் நீங்கி வாழ்க்கையில் வளமும் இன்பமும் பெருகட்டுங் கிறது அதனுடைய அர்த்தம் !

தம்பி.—நீயொண்ணு....எண்ணே ! பசியும், பிணியும் நீங்குமா அண்ணே ?

அண்.—டேய்....எந்தக் காலத்துக்கும் பசி நீங்காதுடா.... ஆனு பசிச்ச நேரத்திலே சாப்பிட ஒண்ணுமில்லாமே கஷ்டப்படுறுங்களே அந்த வறுமை நீங்கும் ! துன்பம் நீங்கும் !

தம்பி.—எப்படியண்ணே அது ?

அண்.—அதைப் பற்றி விவரமாச் சொல்லத்தான் இங்கே வந்திருக்கோம்....

தம்பி.—அப்படின்னு சொல்லு....என் டிலே பண்றே....!

அண்.—கொஞ்சம் பொறுடா....பாரதத்தாய் மீது வாழ்த்துப் பாடல் பாடிவிட்டு பிறகு சொல்றேன்.

(பாட்டு)

(ஜலக்-ஜலக்..தண்டையதன் நாதம்—மெட்டு.)

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
பாரதப் பொன்னுடு
வளம் தவழ் வீடு
தென்றல் பூக்காடு—நல்
மலைத் தேன் கூடு (வாழ்க)

ஓ....வான்தோய் உறிமாசலம் இந்நாட்டின் வட எல்லை
நாட்டின் வட எல்லை
ஓ....தெற்கெல்லை குமரிமுனை ஈடிதற்கு இல்லை
ஈடிதற்கு இல்லை

நிலவள மோடுவான்—நீர்
வளம் சேர்ந்து தான்
சீர்மை மலரும்
செந் நெல் வளரும்
சிந்தை குளிரும் (வாழ்க—வாழ்க)

**அண் :** இப்பேர்ப்பட்ட பாரத நாடு—பாரிற் சிறந்த நாடு—பல காலம் பரங்கியர்கட்கு அடிமைப் பட்டிருந்தது..தான மும்—வீரமும்—நல்லறமும் வளர்ந்த நாடு ஆங்கிலே யர்கட்குப் பலகாலம் அடிமைப்பட்டிருந்தது—இந்தியா வின் செல்வங்களை யெல்லாம் எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயர்கள் சுரண்டிக்கொண்டு சென்றனர்...

(பாட்டு)
(நாடோடிப் பாடல்—மெட்டு)

செல்வம் சிறந்த இடம் என் ஐயாமாரே
சீர் கெட்டுப் போனதய்யோ...
கல்வி நிறைந்த இடம் என் ஐயாமாரே
காலத்தாற் கெட்ட தய்யோ...
முத்து முளைத்த இடம் என் ஐயாமாரே...
மோசம் நிகழ்ந்ததய்யோ...
எத்தனைத் துன்பம் ஐயோ—என் ஐயாமாரே
இந்தியர் கண்டனரே!

**தம்பி :** ஐயோ... ஐயோ.. எண்ணே.. ஆரம்பிச்சு அஞ்சு நிமிஷம் ஆகலே.....அதுக்குள்ளே....ஐயோன்னு ஒப்பாரி வைக்கிறியே—இது என்ன அரிச்சந்திர புராணமா? இல்லே அஞ்சாண்டு திட்டமா....

**அண் :** டேய்..டேய்..இப்படி யெல்லாம் இந்தியாவின் செல்வமும்—சிறப்பும் பாழாச்சுன்னு சொல்லவந் தேன்..

**தம்பி :** சொல்லியாச்சில்லே. அப்புறம் மேலே போ..

**அண் :** வெள்ளையர்களை எதிர்த்து வீர சுதந்திரம் வேண்டினோம்..வீரசுதந்திரம் வேண்டி நின்றோர் பின்னர் வேறொன்று கொள்வாரோ ?

**தம்பி :** கொல்ல மாட்டார்கள்...இல்லே..இல்லே..கொள்ள மாட்டார்கள்.

**அண் :** சுதந்திரம் கிடைத்தது..

**தம்பி :** சுதந்திரம் கிடைத்ததுன்னு சொல்லாதே—சுதந்திரம் வாங்கினோம்..

**அண் :** சுதந்தரம் வாங்கினோம்..காந்தி, நேரு, திருப்பூர் குமரன், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்றவர்களது உயர்ந்த தியாகத்தால் சுதந்திரம் வாங்கினோம்—அன்றிலிருந்து நமது அரசாங்கம் நம்முடைய நாட்டில் பசியும், பிணியும் நீங்க வசியும்—வளனும் சுரக்க திட்டங்கள் தீட்டியது......

(பாட்டு)

(நாட்டுக்கு ஒரு வீரன்—மெட்டு)

பாரத அரசாங்கம் நல்ல
பண்புள்ள அரசாங்கம்—மக்கள்
வேதனை தீர்த்திட நல்வளம் சேர்த்திட
திட்டங்கள் தீட்டியது—அவைகளைச்
செய்தும் காட்டியது—(பாரத)
இன்னும் மேற்கொண்டு இரண்டாம் திட்டத்தைச்
செய்திட உறுதியும் கொண்டது—மக்கள்
எல்லோரும் ஒன்றாய் உழைத்ததினால் அதில் எல்லாம் வெற்றியும் கண்டது—கண்டது (பாரத)

**அண் :** இந்திய சர்க்கார் தீட்டிய திட்டங்களில் நம்முடைய தமிழ் மக்களும் பங்கு கொண்டார்கள்.

**தம்பி :** பங்கு கொண்டார்கள்ன்னு சொன்னா பார்ட்னர் ஷிப்—இல்லியா ?

V. P.—2

**அண் :** இவன் யார்ரா—இவன்—பங்கு கொண்டார்கள்ன்னு சொன்னு அந்தத் திட்டங்கள் வெற்றியடைவதற்காக நமது தமிழ் நாட்டு அரசாங்கமும், அரசாங்கத்தோடு மக்களும் சேர்ந்து உழைத்தார்கள்—வெற்றி கிடைத்தது.

**தம்பி :** பின்னே என்ன ? தமிழ் மக்கள் எல்லோரும் சேர்ந்து உழைச்சா வெற்றியா கிடைக்காது ? அண்ணே தமிழ்க் குலத்தின் பெருமையும், திறமையும் கொஞ்சமா அண்ணே !

**அண் :** டேய் தம்பி . . நல்லா சொன்னேடா . . . .

(பாட்டு)

(மணப்பாரை மாடு கட்டி—மெட்டு)

பொன்மலேயில் கல்லெடுத்து
புலிமீனும் வில்வடித்து
புகழ் மணக்க ஆண்டவனும் சின்னக் கண்ணு—தென்றல்
பூமணக்கும் தமிழ் நிலத்தான் செல்லக் கண்ணு !
அன்பு அறம் அறிவுடனே ஆட்சி செய்யும் திறமுடனே
அகிலமெல்லாம் சென்று வந்தான் சின்னக் கண்ணு
எங்கும் ஆறுகளில் அணைகட்டினுன் செல்லக் [கண்ணு
விவசாயம் வாழ்ந்திடவும் வேளாண்மை வளர்ந்திட [வும்
ஏரிகுளம் பல வெட்டினுன்—சின்னக்கண்ணு— [எங்கும்
ஆறுகளில் அணை கட்டினுன் செல்லக் கண்ணு. [எங்கும்
ஆறுகளில் அணை கட்டினுன் செல்லக்கண்ணு.

**அண் :** டேய் தம்பி ! இந்தத் திட்டத்தின் முக்கியமான அம்சம் என்ன தெரியுமா ? நீர்ப்பாசன வசதிகள் செய்வது இதன் முக்ய அம்சமாகும்.

**தம்பி :** என்னது நீர்ப்பாசாண வசதியா ? அது எதுக்கு. . . .

**அண் :** டேய் நீர்ப்பாசாண மில்லேடா . . நீர்ப்பாசனம் . . அத வது விவசாயம் வளர்வதற்காக பெரிய பெரிய ஆறு களில் அணேக்கட்டி நீரைத் தேக்கி வைத்து அவைகள் மூலம் பலவிதமான திட்டங்களே மேற்கொள்வது...

**தம்பி :** அப்படியா . . அண்ணே . . நால்லாசொன்னே ; ஔவை யார்கூட " வரப்புயர " அப்படின்னுதானே வாழ்த்தி ஞங்க.'

**அண் :** யாரை வாழ்த்திஞங்க ?

**தம்பி :** பாத்தியா—காரியத்தைக் கெடுக்கிறியே . . ஏதோ தெரிந்ததைச் சொன்ஞ அத்தோடு விடாமெ....

**அண் :** சரி சரி வரப்புயர நீருயரும் ! நீருயர நெல் லுயரும்—நெல்லுயரக் குடி உயரும் !—குடி உயரக் கோனுயர்வான் ! பஞ்சம் நீங்கும்—மக்கள் வாழ் வில் துன்பம் தொலேயும்—இன்பம் உண்டாகும்— டேய் தம்பி ! பஞ்சம் இல்லாத நாடு—பத்தினி இருக்கிற வீடு இது தாண்டா சொர்க்கம்.

(பாட்டு)

(ஏர்முனேக்கு நேர் இங்கே—மெட்டு)

பஞ்சமில்லா நாடெல்லாம் சொர்க்கமென்பாங்க—அது
பத்தினியின் வீட்டில் இருக்குமென்பாங்க (பஞ்ச)
வறுமையுள்ள இடத்தையெல்லாம் நரகமென்பாங்க—மிக
வளமையுள்ள இடத்தையெல்லாம் நல்ல தென்பாங்க—[நாம்
திறமையுடன் தொழில் புரிந்தால் பயன் பெறலாங்க—[நம்ப
தேசந்தன்னில் சொர்த்தந்தன்னே பார்த்திடலாங்க (பஞ்ச)
வரப்புயர்ந்தால் நீருயரும் கதிர்கள் விளேயுமே—உயிர்
வாழ்வதற்கு தானியங்கள் வந்து குவியுமே—மக்கள்
சிறப்படைந்தால் ஆட்சியிலும் செழிப்புண்டாகுமே—நம்
தேசமெல்லாம் சொர்க்கம்போலக் காட்சி காணுமே (பஞ்ச)

**அண் :** முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் ஒன்பது ..அவைகளால் பயனடைந்த எக்கர்கள் 964,200.

**தம்பி :** அடேயப்பா! ஆமா அந்த ஒன்பது திட்டங்கள் என்ன என்ன ?

**அண் :** அதை வேறே தெளிவா சொல்லணுமா ?

**தம்பி :** ஆமா..தெளிவில்லாத அறிவும்—வலிவில்லாத உடலும் பயனில்லே பாரு..

**அண் :** சரி..முதலாவது திட்டம் கீழ் பவானி திட்டம்....!

**தம்பி :** பவானி..பவானி..பவானி ஜங்ஷன். வெரிகுட். அருமையான பூமாச்சே...

**அண் :** டேய் டேய் பவானி ஜங்ஷன் இல்லேடா..கீழ் பவானி திட்டம்..கீழ் பவானி..அடுத்தது மேட்டூர் கால்வாய்கள் திட்டம்..மூன்றுவது காவிரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம்..நாலாவது மணி முத்தாறு திட்டம். ஐந்தாவது ஆரணியாறு திட்டம்....!

**தம்பி :** பொறு..பொறு...ஆரணி...ஆரணி..ஆ...ஆரணி குப்புசாமி முதலியாரின் நாவல்கள்..! அருமையான நாவல்கள்..! அடுத்தது என்ன ?

**அண் :** அடுத்தது அமராவதி திட்டம்..அடுத்தது வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி திட்டங்கள்..ஆக ஒன்பது திட்டங்கள்..இதுக்கான செலவு என்ன தெரியுமா ?

**தம்பி :** என்ன ? ஒன்பது திட்டங்களுக்கு, ஒன்பத்தி ஐஞ்சு நாற்பத்தஞ்சு..மொத்தத்தில் ஒரு 5,000 ரூபாய் இருக்குமா ?

அண் : டேய்..ஏறத்தாழ 29 கோடி ரூபாய் செலவாயிருக்கு!

தம்பி : 29 கோடியா..நல்லா பாத்து சொல்லு..29 ஆயிரமா இருக்கும்.

அண் : இல்லேடா! உண்மையிலேயே முதல் திட்டத்திலே 29 கோடி செலவாயிருக்கு. இரண்டாவது திட்டத் திலே புதுசா வேறே நாலு திட்டங்களைச் சேர்த் திருக்காங்க. இப்ப மொத்தமாக நமது தமிழ் நாட்டிலே மட்டும் 13 நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாகிக்கிட்டு இருக்கு..என்று விவசாயம் பாரு.. விவசாயம்தானே தலையான தொழில்....

(பாட்டு)

(மனுஷனை மனுஷன் சாப்பிடுறாண்டா—மெட்டு)

தொழில்களில் சிறந்தது உணவுத் தொழில்தான் தம்பிப்
[பயலே
மிக தொண்மையானது—உண்மையானது உலகந்
[தனிலே!
மாடுகள் இரண்டை ஏர்தனில் பூட்டி தம்பிப் பயலே—நல்ல
மனிதர்கள் வயலில் உழைத்தால் மறையும் நம்பக்
[கவலே!
வீடுகள் தோறும் இன்பம் பெருகும் தம்பிப் பயலே! பட்ட
வேதனை மறையும் தானியம் வந்து குவியும் போதிலே!
(தொழில்)

அண் : இந்தத் திட்டத்தின் இரண்டாவது அம்சம் மின்சக்தி அதிகரிப்பது..

தம்பி : மீன் சக்தியா? உடம்புக்கு நல்லது..! மீன் எண்ணெ ரொம்ப நல்லதாச்சே..!

அண் : டேய் மீன்சக்தியில்லேடா..மின்சக்தி..அதாவது எலக்ரிக்சிடி.

தம்பி : எலெக்டிரி. சிடியா? அப்பிடிச் சொல்லு இங்கி லிஷ்லே..சரி அந்த சிடிக்கு என்ன வந்திச்சு..!

**அண் :** அதாவது முதலாண்டு திட்டத்திலே மோயர்ங்கிற இடத்திலே ஒரு புதிய நிலையம் கட்டினாங்க. அப்புறம் பைகாரா, பாபநாசம், மதுரை, சென்னை இங்கேயெல்லாம் உள்ள மின்சார உற்பத்தி நிலையங்கள் விஸ்தரிக்கப்பட்டன. இதுக்கான செலவு 31 கோடி ரூபாய்....!

**தம்பி :** 31 கோடி ரூபாய்....அடேயப்பா....என்தான் இப்பிடி செலவு பண்றாங்களோ தெரியல்லே..சரி.. இரண்டாவது திட்டத்திலே எவ்வளவு பணம் ஒதுக்கி யிருக்காங்க ?

**அண் :** 53 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்காங்க..இந்த இரண்டாவது திட்டத்தினாலே மேலும் 5,000 கிராமங் களுக்கு மின்சாரம் கிடைக்கும்.

**தம்பி :** ரொம்ப நல்லது..அப்ப அந்த 5,000 கிராமங் களிலும் சினிமா டெண்ட்டுகள் ஒடும்.

**அண் :** அதிலே வேறே சந்தேகமா ? இனிமேலே இந்தியா விலே பெரும்பாலான கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும்....!

**தம்பி :** ஆமா அண்ணே ! என்ன கிராமங்கள் தானே நமது நாட்டின் ஜீவநாடி.. "கிராம மக்களுடைய உழைப்பில்லாட்டி இந்த நாடேது " நாமேது ?

**( பாட்டு)**

(கண்டி ராஜன் நாடகப் பாட்டு—மெட்டு)

காலை முதல் மாலை வரை வேர்வை சிந்தி கிராமங்களில்
வாழும் மக்கள் கோடியாகும்—அவர்க்குக்

கல்விச் செல்வம் தந்து இன்பம் காணுமாறு வாழ் வளித்தல்
நம்முடைய கொள்கையாகும்—

இன்பம் என்ற ஒன்றை என்றும் என்ன வென்றுதான்
அறியார் ஏழை மக்கள் கிராம மக்கள் அல்லவோ ?
[அவர்தம்—
இன்னல்களை நீக்க மிக எத்தனிக்க வேண்டியதன்—
இன்றியமையாமைதனைச் சொல்லவோ ?

**தம்பி :** ஆக, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் அம்சமும் முக்கியமான அம்சமும் கிராமங்களுடைய முன்னேற்றந்தானே.

**அண் :** ஆமா. . அதோடு உணவு உற்பத்தியிலே சுயதேவைப் பூர்த்தி, கைத்தொழில் அபிவிருத்தி இவைகளெல்லாம் உயர்வடையும்.

**தம்பி :** அண்ணே ! கைத்தொழில்ன்னு சொன்னதும் எனக்குக் கைத்தறி ஞாபகத்துக்கு வருது. கைத்தறி அபிவிருத்திக்காக இந்த திட்டத்திலே ஏதாச்சும் ஏற்பாடு. .

**அண் :** ஓ நிறைய இருக்கே. . ? தம்பி. . நம்ப மாநிலத்திலே மட்டும் ஏறத்தாழ $4\frac{1}{2}$ லட்சம் கைத்தறிகள் இருக்கு. . இந்தக் கைத்தறிகளுக்கான கருவிகள் வேண்டுமில்லே. . அதுக்காக கைத்தறிக்கான கருவிகள் தயார் பண்ண சேலத்தில் ஒரு தொழிற்சாலை உருவாகிக்கிட்டு இருக்கு. . !

**தம்பி :** என்னது. ஒரே ஒரு தொழிற்சாலையா ? போதுமா. . !

**அண் :** ஏண்டா. . ஊருக்கு ஒரு தொழிற்சாலையா வைப்பாங்க. . சேலத்தில் உள்ள தொழிற்சாலையில் உற்பத்தியாகக் கூடிய கருவிகள் இந்தியாவுக்குக்கூட சரிக்கட்டும். சரி விஷயத்துக்குவா. . கைத்தறித் தொழிலுக்கு உதவியாக இருக்கிறது செஸ் நிதி. .

**தம்பி :** என்னது. நதியா ? அதென்ன நதி

**அண் :** டேய் நதியில்லேடா..நிதி.

**தம்பி :** நிதி..அதாவது பைனன்ஸ்!

**அண் :** ஆமா..செஸ் நிதி—மற்றபடி கூட்டுறவு சங்கங்கள் இவைகளாலே கைத்தறித் தொழிலுக்கு ஒரு புத் துயிர் ஏற்பட்டிருக்கு. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கைத்தறித் தொழிலுக்கு நல்ல ஏற் பாடெல்லாம் செஞ்சிருக்காங்க.!

**தம்பி :** ஆமாண்ணே! கைத்தறியாளர்கள் படற கஷ்டத் தைப் பார்த்தா என் மனசு பொறுக்கலே!

**அண் :** ஒன் மனசு மட்டுமா. இங்கே யாரு மனசுதான் அந்தக் கஷ்டத்தைப் பார்த்து சும்மா இருக்கும்.

(பாட்டு)

(திருமணமாகி ஒரு முறையேனும்—மெட்டு)

சேய்முகம் வாடித்தன் தாய்முகம் நோக்கிப் பின் சிந்தை
தொந்திடும் வேதனையாம்—இனி
யார்முகம் நோக்கிதான் ஆறுதல் காண்பது—இறைவன்
செய்திடும் சோதனையாம்.
பாலென காற்றென்பனியென ஆடைகள் பலபல நெய்தவர்
துடித்திடவோ—அவர்
பரம்பரை வருந்தும் பரிபவம் அறிந்தும் பார்த்தும்
நம்முள்ளம் சகித்திடவோ.

அதன்படிச் சிந்திச்சுப் பார்த்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே பல அபிவிருத்தி திட்டங்கள் வகுக்கப்பட்டு அதுக்காக 322 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கு. நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்போறுங்க. இதுக்காக 71 லட்ச ரூபாய் செலவு செய்யப்படும். இது மட்டுமில்லாமே கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி நடத்தறதுக்காக அரசாங்கம் லட்சக் கணக்கிலே வேறே செலவு செய்யுது. அத்தோடு கைத்தறி துணி வாங்கிஞ ஒரு ரூபாய்க்கு இரண்டணு தள்ளுபடி வேறே உண்டு.

**தம்பி :** அப்படியா ? அண்ணே. இந்தக் கைத்தறி நெச வாளர்கள் துன்பம் இதோடு தீர்ந்திடணும் அண்ணே.

**அண் :** நிச்சயம் தீர்ந்திடும். .

(பாட்டு)

எங்கள் பண்பான தமிழன்னையே—செல்வ
மலர்ப்பாதம் பணிந்துன்னையே. இந்தத்
தொழில் வாழவே—ஒரு வரம் கேட்கிறோம்
இனிதாக அருள் செய்குவாய் ! (எங்)
துன்பச் சுடுதீதான் சூழாமலே
துயர்க் கண்ணீரில் வாழாமலே
கைத்தறியாளர்கள்—நல்ல சுகம் காணவே
எங்கள் தாயே உன் அருள் காட்டுவாய். (எங்)
உள்ள இருகோடி நெசவாளர்கள்—இந்தத்
தொழில் நம்பி உயிர் வாழ்வதால்
பிள்ளை மனையோடு தம்
பிற உறவோடு தம்—எங்கள்
தாயே நீ காப்பாற்றுவாய். (எங்)

**அண் :** கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே கைவா ளொடு முன் தோன்றிய மூத்த குடியினர்—தமிழ்க் குடியினர்—செய்து வந்தது கைத்தறித் தொழி லாகும். அதற்கு விமோசனம் வந்திருச்சி இந்த இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்திலே. . அடுத்து என்ன தெரியுமா ?

**தம்பி :** என்ன ? கைத்தறிக்கப்புறம் கால்தறி அபி விருத்தியா ?

**அண் :** கால்தறி அபிவிருத்தியில்லேடா. . . . . . . . . கல்வி அபிவிருத்தி. . . . . .

**தம்பி :** கல்வி—படிப்பு.....சே.....சே...எனக்கென்ன வோ இந்தப் படிப்புன்னுலே பகீரெங்குது......

**அண் :** ஏண்டா இருக்காது....அவனவன் படிக்கிறதுக்குப் பணமில்லாமே ஏங்கித் தவிக்கிறான். இவனுக் கென்னமோ பிடிக்கலியாம். டேய். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே கல்விக்கு நிறையப் பணம் செலவழிக்கப்படும். அதோடு ஆறிலிருந்து 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வியும் இதன் அம்சமாகும். லட்சத்திற்கு மேலே புதிய மாணவர் களைச் சேர்க்கணும். 500 பேருக்கு மேலே உள்ள கிராமங்களிலே ஒவ்வொரு பள்ளிக்கூடம் கட்டணும். வருடத்துக்கு 4,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கணும். ஏழைக் குழந்தைகளுக் கெல்லாம் இலவச பகல் உணவு கொடுக்கணும்ன்னு அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே ஏற்பாடு செஞ்சிருக்கு. இலவசப் பகல் உணவுமட்டும் ஆறு லட்சம் குழந்தைகளுக்குக் கொடுப்பாங்க....

**தம்பி :** என்னது....குழந்தைகட்கு மட்டும்தானு பகல் உணவு......நமக்கெல்லாம் இல்லையா ?

**அண் :** எய். ஒனக்கென்னடா....தருமம்—இல்லாதவங் களுக்குதான்....'இல்லார்க்கென்று ஈவதே ஈகை' அப்படின்னு தமிழ் இலக்கியம் சொல்லுது....

**தம்பி :** சரி....சரி....இதுதான் சமயமின்னு நீ பிரசங்கம் பண்ணி உயிரை வாங்காதே....விஷயத்துக்குவா..

**அண் :** இதுபோன்ற பல திட்டங்கள் கல்வி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன......இவைகள் மூலம் நம் நாட்டு மக்கள் கல்வியிலே வல்லவர்கள் ஆகப்போறுங்க,

(பாட்டு)

(நாடோடிச் சிந்து—மெட்டு)

கதிரொளி தோன்றியதும் காரிருள் மறைவதுபோல்
அறிவொளி தோன்றியதும் அறிவின்மை மறையு
[மய்யா
புது ஒளி சேர்த்திடவும் புத்துலகாக்கிடவும்
இது நல்ல தருணமய்யா—இனி என்ன வேண்டு
[மய்யா, இனியும் என்ன வேண்டுமய்யா
சரித்திரம் அறிந்திடவும் சாஸ்திரம் அறிந்திடவும்
கவித்திறம் அறிந்திடவும் கலைத்திறன் அறிந்திடவும்
மருத்துவம் அறிந்திடவும் மாப்புகழ் அடைந்திடவும்
இது நல்ல தருணமய்யா—இனி என்ன வேண்டு
[மய்யா—
இனியும் என்ன வேண்டுமய்யா ?

அண் : கல்விக்காக இவ்வளவு ஏற்பாடுகளும் நடக்கின்ற பொழுது சமுதாய நலத்திட்டம்; கதர் அபிவிருத்தி போன்ற வேறு திட்டங்களும் இருக்கு....

தம்பி : இது வேறேயே—அண்ணே—தெளிவாக எடுத்துச் சொல்லு......

(பாட்டு)

(மனுஷனுகிப் போனேன்—மெட்டு)

எடுத்துச் சொல்லவேண்டும்—நன்ருக
எடுத்துச் சொல்லவேண்டும்
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலுலே
ஏற்படும் நன்மையை மக்கள் முன்னுலே..(எடுத்து)
கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி
காந்தி போற்றிய கதர் அபிவிருத்தி
மேவும் கால்நடைகள் நிலைமையைத் திருத்தி
செய்யும் வேலைகளை ஓர் முறைப்படுத்தி (எடுத்து)

மக்கள் நலத்துக்கு மருத்துவ மனைகள்
மீன்பிடி தொழிலின் வளர்ச்சிக்குப் பணிகள்
மிக்க வனங்களைக் காப்பது அத்துடன்
மேன்மையான பல திட்டங்கள் அமைப்பதை
(எடுத்துச்)

**அண் :** டேய் தம்பி....இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே மற்ருெரு முக்கியமான அம்சம் என்ன தெரியுமா ? மாதர் நலன்......

**தம்பி :** என்ன ?

**அண் :** அதாவது பெண்களுடைய நலன்—முன்னேற்றம்

**தம்பி :** அப்படின்னு ஆண்களுடைய நலன்—முன்னேற்றம் இதெல்லாம் என்ன ஆவது ?

**அண் :** இந்த மாதிரியெல்லாம் குதர்க்கம் பேசக்கூடாது. அதாவது பல காலமாக நமது நாட்டுப் பெண்களெல்லாம் ரொம்பப் பிற்பட்ட நிலையில் இருந்ததாலே இப்பொழுது அவர்களுக்குத் தானே முன்னேற்றம் வேண்டியிருக்கு.....

**தம்பி :** அப்படியா ? முன்னேற்றமுன்னு அவங்களா முன்னேறிக்கட்டும்....அதுக்கு அரசாங்கம் என்ன பண்ணப் போவுது ?

**அண் :** அதாவது ஒவ்வொரு மாவட்டத்தில் பெண்களுக்காகச் சேவா நிலையங்களை ஏற்படுத்துகிறது. வயோதிகப் பெண்கள், வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கு உதவி செய்யறதுக்காக இந்தச் சேவா நிலையங்கள்....மற்றபடி தொழில் கேந்திரங்கள், இவைகளுக்காக ரூ. 35 லட்சம் செலவாகுமுன்னு எதிர்பார்க்கப்படுது....

**தம்பி :** அடேயப்பா ? இந்த பெண்களுக்காக நம்ப வீட்டிலே செலவு பண்றது போதாதுன்னு வெளியிலே வேறே செலவு பண்ணணுமா ?

**அண் :** டேய் தம்பி, ஒரு நாடு முன்னேறணுமுன்னு சொன்னா அந்த நாட்டின் பெண்கள் முன்னேறணும். "பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பு" அப்படின்னும், "சித்ர நிகர் பெண்களை வாழ்விக்க, பாரத புத்திரர்களே வாருங்கள்" அப்படின்னும் நம்ப கவிஞர்கள் பாடியிருக்காங்க.

**தம்பி :** கவிஞர் பாடுறது இருக்கட்டும். இப்போ நீ என்ன பாட்டுப்பாடி உசிரை வாங்கப்போறே......

(பாட்டு)

(துயில்நீங்கி எழுந்திடுவாள்—மெட்டு)

ஈன்றே புறந்தருவாள்
இனிமையுடன் வளர்த்திடுவாள்
சான்றோன் என்றே அறிந்து
எல்லையிலா மகிழ்வடைவாள்
தாய் எனப்படும் தெய்வம்—தலை
வணங்கி வணக்கம் செய்வோம்.
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பென்னும் அருங் [குணங்கள்
அணியாகக் கொண்டுள்ள அன்னையர்கள் நம் [கண்கள்
தொட்டிலையாட்டும்—கை தொல்லுலகாளும்
கற்பின் திறன் அதனால் ஊரழித்தாள் பெண் [ணொருத்தி
கையேந்தி வந்தவர்க்கு உணவளித்தாள் மற்றொருத்தி
பெண்களின் ஏற்றம்—நம் நாட்டின் முன் [னேற்றம்...

**அண் :** சரி. மாதர் நலன் முடிஞ்சுது..இனி மற்றவர்கள் நலன்களைப் பார்ப்போமா ?

**தம்பி :** பின்னே ! மாதர் நலன்மட்டும் போதுமுன்னு போயிட முடியுமா ? மற்றவர்கட்கு—முக்கியமா தொழிலாளர்களுக்கு இந்தத்திட்டதிலே என்ன நன்மையிருக்குமுன்னு சொல்லு !

**அண் :** தொழிலாளர்கள்.... !

**தம்பி :** ஆமா தொழிலாளர்கள்..இந்த நாட்டை உருவாக்கியவர்கள்—உழைத்து உழைத்து உருக்குலைந்தவர்கள். ஓடாகிப்போனவர்கள் !

**அண் :** டேய் .டேய்..டேய்.... என்னடா.... சொல்றத்துக்குள்ளே உசிரை விட்டுடுவேபோலே இருக்கே..இந்தத் திட்டத்திலே தொழிலாளர்களுக்கு நெறைய வசதி இருக்கு....

**தம்பி :** எங்கே இருக்கு..வீதியிலே விழுந்து தூங்குறான்.. அவனுக்குக் குடியிருக்க ஒரு வீடு இல்லே.. !

**அண் :** பொறு..அதுக்கு மேலே போகாதே..தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர்றதுன்னு இந்தத் திட்டத்திலே ஒரு முக்கியமான அம்சம் இருக்கு. அதாவது சென்னையிலே—நம்ப தமிழ் நாட்டிலே—உள்ள தொழிலாளருக்கு வீடு கட்டித் தர்றதுக்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே ரூ. 56 லட்சம் ஒதுக்கியிருக்காங்க ....இந்த 56 லட்சத்திலே இதுவரைக்கும் நம்ப சென்னை அரசாங்கம் 29 லட்சம் செலவு பண்ணி சுமார் 1,000 வீடுகளைக் கட்டியிருக்கு. அதாவது இரண்டு காலனிகள்.. இப்பொழுது அந்த 1,000 வீடுகளிலே பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்காங்க..

**தம்பி :** ஆமாண்ணே ! நான்கூட பாத்தேன்.... !

**அண் :** நீ மட்டுமா ? எல்லோரும் பார்த்தோம். ! கண்ணுலே பார்த்தோம்.

**தம்பி :** கண்ணுலே பார்க்காமே காதாலேயே பார்க்கிறது !....

**அண் :** யார்டா இவன் ? ஏண்டா ? " கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால் " அப்படின்னு கம்பர் பாடுறரே— இந்த மாதிரியா கேக்கறது.

(பாட்டு)

(காலணு மிஞ்சாதய்யா—மெட்டு)

கண்களாற் கண்டோமய்யா—கண்களாற் கண்டோமய்யா
களிப்பே கொண்டோமய்யா—களிப்பே கொண்டோமய்யா (கண்)
ஏழைத் தொழிலாளர்கள் எங்கும் நிலை தீரவே—இந்த
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்தான் வந்ததே !
வாழ்வின் நலங் காணவும், வறுமைத் துயர் நீங்கவும்
நாளும் குன்றுமலே ஆட்சி வளம் தந்ததே !
உலகம் புகழ்ந்ததய்யா....
உவகை பிறந்ததய்யா
உள்ளம் பொங்குதய்யா
உணர்வு பொலிந்ததய்யா. (கண்)

**அண்.**—இது மட்டுமில்லாமே மலேயிலே வேலே செய்யக்கூடிய தொழிலாளர்கள் . . .

**தம்பி.**—மலேயிலே வேலே செய்யறது ? என்ன வேலே யண்ணே....விறகு வெட்றது....பலாப்பழம் திருடறது.... இது மாதிரி....

**அண்.**—பின்னுலே சொன்னியே பலாப்பழம் திருடறது.... அது நீ....

**தம்பி.**—சரி. அப்ப முன்னாலே சொன்னேனே விறகு வெட்டுறது. அது நீயா ?

**அண்.**—யார்ரா இவன்.... 'டேய்' மலையிலே வேலை செய்யறதுன்னு சொன்னா இந்த காபி, தேயிலை பயிரிடுறது—மற்றபடி இந்த யூகலிப்டஸ்....

**தம்பி.**—யூகலிப்டஸ்....ஓஹோ....அது ஒருவகை லிப்ஸ்டிக்கோ.. என்ன பேரு ஒரே மாதிரியா இருக்கே..

**அண்.**—லிப்ஸ்டிக் இல்லேடா. 'யூகலிப்டஸ்'.... தலை வலிக்குப் போடற தைலம்....! இந்த மாதிரி வேலைகளிலே ஈடுபட்டிருக்காங்களே தொழிலாளர்கள், அவர்களுக்கு முதலாளிகள் வீடு கட்டித் தரணும் அரசாங்கம் ஒரு சட்டம் போட்டிருக்கு....

**தம்பி.**—பூ....இதுதானா ? முதலாளி வீடு கட்டித் தர்றதுக்கு இவங்க என்ன சட்டம் போடறதாம்..

**அண்.**—இல்லேடா..இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சுமார் 31·32 லட்சம் ரூபாய் ஒதுக்கி அதை அந்தந்த முதலாளிக்குப் பிரிச்சுக் கொடுக்கறது.... அந்த முதலாளிகள் அந்தப் பணத்தோட தாங்களும் கொஞ்சம் பணம் போட்டு வீடுகள் கட்டுறது..

**தம்பி.**—அண்ணே ! நல்ல யோசனை அண்ணே அது ! பணம் ஒரே இடத்திலே தேங்கியிருக்காமே இப்படிப் பல வழிகளிலே பயன்படனும்....

**(பாட்டு)**

(ஆசையே அலைபோலே—மெட்டு)

ஓங்கிடும் மலைமேலே
உழைத்திடும் தொழிலாளர்
வேண்டும் வசதி செய்திடும் சேவை—உடன்
தேவையாம் (ஓங்)

உழைக்கும் உண்மை ஏழைகள்
இருக்கத் தகுந்த வீடுகள்
அளித்தல் ஆட்சியின் கடமை—வரும் முறைமை—
[அதுதான் பெருமை
இன்பம் என்பது ஒருவர்க்கன்று—பொது
வாகுமே. (ஓங்கி)

ஒருவன் வீட்டில் வாழவும்
ஒருவன் வீதியில் வாடவும்
இருக்கும் நிலைமை மாறும்—இன்பம் சேருமே—இனி
[நாள் தோறும்
ஐந்து ஆண்டுகள் திட்டத்தின் அருமையார்
சொல்லுவார். (ஓங்கிடும்)

**தம்பி.**—அப்போ—தொழிலாளர்களுக்கெல்லாம் வீடு கிடைக்கப் போவுது?

**அண்.**—ஆமா....கூட்டுறவு அடிப்படையிலே விவசாயிகளுக்கு கடன் கொடுக்கறதுக்கும் ஒரு திட்டம் இருக்கு....

**தம்பி.**—என்னது. கடன் கொடுக்கிறதுக்கு ஒரு திட்டமா? ரொம்ப நல்லதாப் போச்சு....எங்கே..எங்கே.... விளக்கமாகச் சொல்லு....நமக்கும் கடன் கிடைக்குமான்னு பார்ப்போம்?

**அண்.**—அதாவது நியாயமான நிபந்தனைகளின் பேரில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறது. இப்போது 14 மத்திய கூட்டுறவு பாங்குகளும், 9,000 பூர்வாங்க கூட்டுறவு கடன் சங்கங்களும் இருக்கு......இதை அபிவிருத்தி பண்றதுக்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே ஒரு அம்சம் இருக்கு..அதென்னன்னு பற்பல கிராமங்களை ஒண்ணு சேர்த்து ஒருங்கிணைந்த கிராமக் கடன் திட்டம்ன்னு ஏற்பாடாயிருக்கு. இதுக்காக அரசாங்கம் ரூ. 18 கோடி மான்யமளிக்கும்.

தம்பி.—18 கோடி போதுமா ? கிராம மக்களுக்குக் கடன் தரணுமின்னு 18 ஆயிரம் கோடி வேணுமே ?

அண்.—டேய். . . .தேவைப்பட்ட கடன் பணத்திலே இந்த 13 கோடி 30 சதவிகிதம்தான். மீதிக்கு முதல் ஐந்தாண்டு திட்டத்திலேயும் ஏற்பாடாயிருக்கு. அதாவது தனியார்களுடைய பொருளாதார கெடு பிடிகள் இல்லாமே தனித்தனி—அதாவது சின்ன சின்ன விவசாயிகள் வாழறதுக்கு இந்தக் கூட்டுறவு திட்டம் ரொம்ப முக்கியமானது. . . .

தம்பி.—அப்படின்னு எல்லாம்—எல்லோருக்குங்கிற சோஷலிஷ சமுதாய அமைப்புக்கு இது ஒரு வழி காட்டின்னு சொல்லு.

(பாட்டு)

(கும்மி பாட்டு.)

இந்திய நாடெங்கும் கூட்டுறவு
    இனிதாகப் பரவிடும் காலமிது. .இனி
முந்திய செல்வர்கள் மூர்க்கத்தனம்
    தொழிலாளரை எய்க்க முடியாது. . . .
ஏழை எளியவர் வாழ்வதுதான்
    இரண்டாவது திட்டத்தின் லட்சியமாம்—உள்ள
இந்தியர்கள் இதை நன்குணர்ந்தே—மிக
    ஒத்துழைத்தால் வெற்றி நிச்சயமாம். . . .

தம்பி.—ஆக நாட்டு மக்களுக்கான திட்டம் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

அண்.—மக்களுக்காக மக்களால் அமைக்கப்பட்ட மக்களுடைய திட்டம் இது. . . .இதற்கு மக்கள் ஒத்துழைப்பு மிகவும் வேண்டும். அணுவும் அசையுமோ ஆண்டவனின் அருள் இல்லாமல்—அப்படிங்கிற மாதிரி மகத்தான

திட்டங்களாக இருந்தாலும்—அவைகளை நிறைவேற்ற மலை மலையான செல்வமிருந்தாலும் மக்கள் ஒத்துழைப்பு முக்கியம். . . .

**தம்பி.**—ரொம்ப முக்கியம். . . .

**அண்.**—இன்னும் ஒண்ணு முக்கியம்! அது என்னன்ன சோஷலிச சமுதாய அமைப்பு என்ற லட்சியத்தை நெஞ்சிலே வைத்து, அந்த லட்சியத்துக்குப் பங்கமில்லாமல், ஏழைகளை தூக்கிவிடப் பாடுபடறது. அதுக்கு நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பு ரொம்ப முக்கியம்.

**(பாட்டு)**

(நாடோடிச் சிந்து.)

இன்பத் தமிழ் நாட்டினரே. . . .
    இன்னுமொன்று கேட்டிடுவீர். . . .
துன்பம் தனை ஓட்டிடுவோம்
    துய்ய பணி நாட்டிடுவோம். (இன்பத்)
ஆட்சியினர் அமைத்த திட்டம்
    அத்தனையும் முடியுமட்டும்
மாட்சியுடன் கை கொடுப்போம்
    மண்ணில் நல்ல பெயரெடுப்போம். (இன்பத்)
ஆளுபவர் ஆசையெல்லாம்
    ஆன மக்கள் கையிலன்றோ ?
நாளும் இதை முடிக்கச் சேவை
    நல்குவதும் கடமையன்றோ. (இன்பத்)

———

சென்னை அரசாங்க அச்சுக்கூட மேற்பார்வையாளரால்
அச்சிடப்பட்டது
1958